## **நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்-1, பத்மநாபபுரம்**

## **முன்னிலை திருமதி. V. பார்கவி, B.A., B.L., LLM.,**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்-1,

**2026** ஆம் ஆண்டு ஜுன் மாதம் 15 ஆம் நாள் **திங்கட் கிழமை**

திருவள்ளுவர் ஆண்டு 2057, பராபவ வருடம் ஆனி திங்கள் 1-ம் நாள்

**ஆண்டுப்பட்டியல் வழக்கு எண்.533/2019**

**CNR.No.TNKK09001486-2019**

| | |
|---|---|
| அரசுக்காக, காவல் உதவி ஆய்வாளர்,<br>தக்கலை காவல் நிலையம்,<br>குற்ற எண்.194/2019 | ................ குற்றமுறையீட்டாளர், |
| **/எதிர்/** | |
| மதீஷ் (வயது32),<br>த/பெ.ராஜேந்திரன்,<br>வாழவிளை,<br>கோடியூர்,<br>குழிக்கோடு அஞ்சல். | ................... 1ம் குற்றம் சுமத்தப்பட்ட நபர் |
| கிருஷ்ணகுமார் (வயது 42),<br>த/பெ. பிரான்சிஸ்,<br>தைபிலாவிளை,<br>கோடியூர்,<br>குழிக்கோடு அஞ்சல். | .................. 2 ம் குற்றம் சுமத்தப்பட்ட நபர் |
| சுவாமி நாடான் (வயது 50),<br>த/பெ. பாலையன்,<br>தைபிலாவிளை,<br>கோடியூர்,<br>குழிக்கோடு அஞ்சல். | .................. 3 ம் குற்றம் சுமத்தப்பட்ட நபர் |

# CASE SUMMARY

| Statement as per Rule 106 of the Criminal Rules of Practice, 2019 | | | |
|---|---|---|---|
| 1. | Case Number | | Calendar Case (CC) No.533 of 2019 |
| 2. | Name of the Police Station and Crime Number | | State of Tamilnadu,<br>Represented by its<br>Sub Inspector of Police,<br>Thuckalay Police Station,<br>Thuckalay. (Cr.No.194/2019).<br>…..Complainant |
| 3. | Name of the Accused person | Description of the Accused | A1- Matheesh<br>A2 – Krishnakumar<br>A3 – Swami Nadan |
| 4. | Father's/Husband's Name | | A1 Son of Rajendran<br>A2 Son of Francis<br>A3 Son of Palaiyan |
| 5. | Occupation | | A1 to A3 - Coolie |
| 6. | Residence of the Accused | | A1- Vazhavilai, Kodiyoor, Kuzhicode Post.<br>A2 and A3 - Thaipilavilai, Kodiyoor, Kuzhicode Post. |
| 7. | Age and Gender | | A1 – 32/2019, Male.<br>A2 – 42/2019, Male.<br>A3 - 50/2019, Male |
| 8. | Date of Occurrence | Date of | 31.03.2019 at 11.00 hrs |
| 9. | Date of Information to the Police | | 31.03.2019 at 16.00 hrs |
| 10. | Apprehension | | A1 – 31.03.2019 |
| 11. | Release on Bail | | A1 – 12.04.2019 |
| 12. | Period of remand of the accused | | -- |
| 13. | Filing of complaint/final report in the Court | Date of | 15.11.2019 |
| 14. | Committal of the case to the Court of Sessions | | Nil |

<table>
<tr><td>15.</td><td>Questioning of the accused u/s 281 of Cr.P.C</td><td rowspan="11"></td><td colspan="3">28.12.2020</td></tr>
<tr><td>16.</td><td>Commencement of Trial (the date on which the documents u/s 207 of the Cr.P.C are furnished to the accused</td><td colspan="3">21.12.2020</td></tr>
<tr><td rowspan="7">17.</td><td rowspan="7">Examination in Chief and Cross examination of a witness</td><td>Witness</td><td>Chief Examination</td><td>Cross Examination</td></tr>
<tr><td>P.W.1</td><td>02.06.2026</td><td>02.06.2026</td></tr>
<tr><td>P.W.2</td><td>02.06.2026</td><td>02.06.2026</td></tr>
<tr><td>P.W.3</td><td>02.06.2026</td><td>02.06.2026</td></tr>
<tr><td>P.W.4</td><td>02.06.2026</td><td>02.06.2026</td></tr>
<tr><td>P.W.5</td><td>02.06.2026</td><td>02.06.2026</td></tr>
<tr><td>P.W.6</td><td>04.06.2026</td><td>04.06.2026</td></tr>
<tr><td>18.</td><td>Date of examination of the accused under section 313(1)(b) of Cr.P.C</td><td colspan="3">08.06.2026</td></tr>
<tr><td>19.</td><td>Closure of Trial</td><td colspan="3">08.06.2026</td></tr>
<tr><td rowspan="2">20.</td><td rowspan="2">Details of abscondence of an accused and his appearance/production, as the case may be</td><td rowspan="2"></td><td>Warrant</td><td>Abscondence</td><td>Appearance</td></tr>
<tr><td>Non-Bailable Warrant</td><td>-</td><td>-</td></tr>
<tr><td>21.</td><td>Grant of stay by superior Courts and results thereof</td><td></td><td colspan="3">Nil</td></tr>
<tr><td>22.</td><td>Sentence or Order</td><td></td><td colspan="3">முடிவாக, 1-ம் குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு எதிராக இ.த.ச. 1860 பிரிவுகள் 294(பி), 452 (2 counts), 427, 506(ii) மற்றும் 4 of TNPWH Act (2 counts) -ன் கீழும், 2 மற்றும் 3 குற்றம் சுமத்தப்பட்ட நபர்களுக்கு எதிராக இ.த.ச. 1860 பிரிவுகள் 294(பி), 452, 506(ii) -ன் கீழான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப் படாததால் சந்தேகத்தின் பலனை</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | | | இவ்வழக்கின் 1 முதல் 3 குற்றம் சுமத்தப்பட்ட நபர்களுக்கு அளித்து 1 முதல் 3 குற்றம் சுமத்தப்பட்ட நபர்களை இவ்வழக்கின் குற்றவாளிகள் இல்லை என தீர்மானித்து கு.வி.மு.ச. பிரிவு 248(1)-ன் கீழ் 1 முதல் 3 குற்றம் சுமத்தப்பட்ட நபர்களை விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. |
| 23. | Service of copy of judgment of findings on accused | | Copy of the judgment will be uploaded in CIS and made available for viewing in e-courts services portal. |
| 24. | Explanation of delay | | - |
| 25. | Details of victim compensation ordered | | Nil |
| 26. | Filing of miscellaneous petitions and their results including the results on challenge before Superior Court | | Petition / Crl.M.P.No / Result:<br>Advance hearing / 1977/2020 / Allowed on 09.11.2020<br>Warrant Recall / 1978/2020 / Allowed on 09.11.2020<br>Surrender petition / 1976/2020 / Allowed on 09.11.2020 |

| Petition | Crl.M.P.No | Result |
|---|---|---|
| Advance hearing | 1977/2020 | Allowed on 09.11.2020 |
| Warrant Recall | 1978/2020 | Allowed on 09.11.2020 |
| Surrende r petition | 1976/2020 | Allowed on 09.11.2020 |

இவ்வழக்கு 15.11.2019 அன்று நீதிமன்றத்தில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு இது நாள் வரை இந்நீதிமன்றத்தில் பரிசீலனையில் இருந்து வந்து இவ்வழக்கு 15.06.2026 இந்நீதிமன்ற இறுதி விசாரணைக்கு வரப்பெற்று அரசு தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை 1 அவர்களும், குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர்கள் திரு.M.ஆகாஷ்தேவ் மற்றும் திரு.L.R.பிரதீப், ஆகியோர்கள் ஆஜராகியும் வாதத்தை கேட்டும் ஆவணங்களை பரிசீலனை செய்தும் ஆராய்ந்தும் இன்று 15.06.2026 ஆம் தேதி நீதிமன்றம் கு.வி.மு.ச 1973 அத்தியாயம் XXVII ன் கீழ் பிறப்பிக்கும்.....

## <u>தீர்ப்புரை</u>

1. இவ்வழக்கானது தக்கலை காவல் நிலைய உதவி ஆய்வாளர் அவர்கள் குற்றம் சுமத்தப்பட்ட நபர்களுக்கு எதிராக இந்திய தண்டனைச்சட்டம் 294(பி), 452, 427, 506(i) மற்றும் 4 of TNPWH Act பிரிவின் கீழ் குற்ற எண்.194/2019-ல் தாக்கல் செய்யப்பட்டுள்ள இறுதியறிக்கையின்பேரில் தொடரப்பட்டதாகும்.

**2. அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட குற்ற இறுதி அறிக்கையின் சுருக்கம் :-**

இவ்வழக்கில் புகார்தாரர் குடும்பத்தினருக்கும், குற்றம் சுமத்தப்பட்ட நபர்களுக்கும் கோவில் விழாவின்போது சாலையை அடைத்து மேடை அமைத்தது சம்பந்தமாக பிரச்சனை ஏற்பட்டு முன்விரோதம் இருந்து வந்தது. இந்நிலையில் கடந்த 31.03.2019-ம் தேதி 11.00 மணிக்கு குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் மூவரும் ஒன்று சேர்ந்து புகார்தாரரின் வீட்டு முன்பு சென்று புகார்தாரரை பார்த்து கெட்டவார்த்தைகள் பேசியும், 1-ம் குற்றம் சுமத்தப்பட்ட நபர் புகார்தாரரின் வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்து வீட்டிலிருந்து செயர்களை எடுத்து வெளியே எறிந்தும், புகார்தாரரின் சேலையை பிடித்து இழுத்தும் பெண்மைக்கு அவமானம் ஏற்படுத்தியும், குற்றம் சுமத்தப்பட்ட நபரின் கையிலிருந்த உருட்டு கட்டையால் ரோட்டில் நிப்பாட்டியிருந்த புகார்தாரரின் மகனுக்கு சொந்தமான NISSAN Company-யின் TN 10 AR 9469 என்ற பதிவெண் கொண்ட காரின் கண்ணாடியை அடித்து உடைத்து சுமார் ரூ.25,000/- சேதத்தை ஏற்படுத்தியும், மீண்டும் 1 முதல் 3 குற்றம் சுமத்தப்பட்ட நபர்களும் சாட்சி 2-ன் வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்து

ஆபாசமாக பேசியும், 1-ம் குற்றம் சுமத்தப்பட்ட நபர் சாட்சி 2-ன் சேலையை பிடித்து இழுத்தும் பெண்மைக்கு அவமானம் ஏற்படுத்தியும், எங்களால் தான் உங்களுக்கு சாவு என கொலை மிரட்டல் விடுத்தது குறித்தும் குறிப்பிட்டு 1-ம் குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு எதிராக இ.த.ச. 1860 பிரிவுகள் 294(பி), 452, 427, 506(i) மற்றும் 4 of TNPWH Act -ன் கீழும், 2 மற்றும் 3 குற்றம் சுமத்தப்பட்ட நபர்களுக்கு எதிராக இ.த.ச. 1860 பிரிவுகள் 294(பி), 452, 506(i) -ன் கீழும் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக இறுதியறிக்கையானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. **<u>கு.வி.மு.ச 1973 பிரிவு 207 ன் கீழ் வழக்கு ஆவண நகல்கள்</u>** :-

இவ்வழக்கின் 1 முதல் 3 குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் நீதிமன்றத்தில் முன்னிலை - யானவுடன் குற்றமுறையீட்டாளர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்காவணங்களின் நகல்கள் அனைத்தும் கு.வி.மு.ச 1973 பிரிவு 207 ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது.

4. **<u>கு.வி.மு.ச 1973 பிரிவு 240 ன் கீழ் குற்றச்சாட்டு வனைதல் :-</u>**

வழக்காவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டதின் அடிப்படையில் இவ்வழக்கின் குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் குற்றம் புரியப்பட்டிருக்கலாம் என அனுமானம் கொள்வதற்கு ஆதாரம் இருந்ததால் கு.வி.மு.ச 1973 பிரிவு 240 ன் கீழ் 1-ம் குற்றம் சுமத்தப்பட்ட நபரின் மீது இ.த.ச. 1860 பிரிவுகள் 294(பி), 452 (2 counts), 427, 506(ii) மற்றும் 4 of TNPWH Act (2 counts) -ன் கீழும், 2 மற்றும் 3 குற்றம் சுமத்தப்பட்ட நபர்களின் மீது

இ.த.ச. 1860 பிரிவுகள் 294(பி), 452, 506(ii) -ன் கீழும் தனித்தனியே குற்றச்சாட்டுகள் வனையப்பட்டது.

**5.** வனையப்பட்ட குற்றச்சாட்டுகளை கு.வி.மு.ச **1973 பிரிவு 240(2)-ன்** படி தமிழில் எடுத்துக்கூறி விளக்கி வினவப்பட்டது. இவ்வழக்கின் குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் குற்றவாளிகள் இல்லை எனவும், வழக்கை மேற்கொண்டு நடத்த விருப்பம் எனகூறி குற்றச்சாட்டுகளை மறுத்து வழக்கு விசாரணைக்கு வேண்டினார்கள். எனவே அரசுதரப்பு சாட்சிகளின் விசாரணைக்கு கு.வி.மு.ச 1973 பிரிவு 242 ன் கீழ் உத்தரவிடப்பட்டது.

**6. கு.வி.மு.ச 1973 பிரிவு 242 ன் கீழ் அரசுத்தரப்பு சாட்சிய சான்றாவணங்கள் :-**

அரசுத்தரப்பில் அ.சா.1 செல்வி, அ.சா.2 சசிகலா, அ.சா.3 பிரின்சிலா, அ.சா.4 இலுக்கையன், அ.சா.5 சூரியன், அ.சா.6 ராஜகுமார் (தலைமை காவலர் - கூடுதல் சாட்சி) ஆகியோர்கள் அ.சா.1 முதல் அ.சா.6 வரையிலான சாட்சிகளாக விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.6 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வழக்கில் வழக்கு சொத்து எதுவும் அரசு தரப்பில் குறியீடு செய்யப்படவில்லை.

**7. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களின் சுருக்கம்:-**

கடந்த 31.03.2019-ம் தேதி 11.00 மணிக்கு குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் புகார்தாரரை பார்த்து கெட்டவார்த்தைகள் பேசி, புகார்தாரரின் வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்து வீட்டிலிருந்து செயர்களை எடுத்து வெளியே எறிந்து, புகார்தாரர் மற்றும் சாட்சி 2-ன்

சேலையை பிடித்து இழுத்து பெண்மைக்கு அவமானத்தை ஏற்படுத்தி, மேலும், புகார்தாரரின் மகனுக்கு சொந்தமான NISSAN Company-யின் TN10 AR 9469 என்ற பதிவெண் கொண்ட காரின் கண்ணாடியை உடைத்து சுமார் ரூ.25,000/- சேதத்தை ஏற்படுத்தி, எங்களால் தான் உங்களுக்கு சாவு என கொலை மிரட்டல் விடுத்ததாக குறிப்பிட்டு 1-ம் குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு எதிராக இ.த.ச. 1860 பிரிவுகள் 294(பி), 452 (2 counts), 427, 506(ii) மற்றும் 4 of TNPWH Act (2 counts) -ன் கீழும், 2 மற்றும் 3 குற்றம் சுமத்தப்பட்ட நபர்களுக்கு எதிராக இ.த.ச. 1860 பிரிவுகள் 294(பி), 452, 506(ii) -ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றத்திற்குரிய இறுதியறிக்கையானது தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிட்டு அரசு தரப்பில் சாட்சியங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

8. அரசு தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களிலிருந்து தெரிய வரும் அரசு வழக்கின் சுருக்கம் என்னவென்றால், இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரரான **அ.சா.1** செல்வி என்பவரின் சாட்சியத்தில் சம்பவம் பற்றியும், புகார் மனு கொடுத்தது பற்றியும், **அ.சா.2 சசிகலா** மற்றும் **அ.சா.3 பிரின்சிலா** ஆகியோர்கள் சாட்சியத்தில் சம்பவத்தை நேரில் பார்த்ததைப் பற்றியும், சம்பவம் பற்றியும் **அ.சா.4 இலுக்கையன் மற்றும் அ.சா.5 சூரியன்** ஆகியோர்கள் சாட்சியத்தில் பார்வை மகஜர் மற்றும் அத்தாட்சியில் கையொப்பமிட்டது பற்றியும், **அ.சா.6 ராஜகுமார்** தலைமை காவலர் ஆவணங்களின் அடிப்படையில் சிறப்பு உதவி ஆய்வாளருக்கு பதிலாக சாட்சியம் அளித்து தனது சாட்சியத்தில் அ.சா.1 செல்வி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த **அ.சா.ஆ.1** புகார்

மனுவை பெற்று, புகார் மனுவில் அ.சா.2-ன் 2 வது கையொப்பம் **அ.சா.ஆ.2** எனவும், புகார் மனுவின் தன்மைக்கேற்ப காவல்நிலைய குற்ற எண்.194/2019 சட்டப்பிரிவுகள் 294(பி), 452, 427, 506(i) மற்றும் 4 of TNPWH Act ன் படி **அ.சா.ஆ.4** முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, வழக்கு கோப்பை உதவி ஆய்வாளர் இசக்கி அவர்களின் பார்வைக்கு வைத்ததை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 31.03.2019 ம் தேதி 11.00 மணிக்கு வழக்கின் சம்பவ இடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு, **அ.சா.ஆ.5** மாதிரிவரைபடம் மற்றும் **அ.சா.ஆ.6** பார்வை மகஜர் தயார் செய்து, பார்வை மகஜரிலுள்ள அ.சா.4-ன் முதலாவது கையொப்பம் **அ.சா.ஆ.3** எனவும், சம்பவ இடத்திலிருந்த இவ்வழக்கின் தடயபொருட்களான உடைந்த பிளாஸ்டிக் சேயர் துண்டுகள் ஆகியவற்றை சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சி மூலம் கைப்பற்றி படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தும், பட்டியல் சாட்சிகள் 1 முதல் 6 வரையிலானவர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தும், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு உதவி ஆய்வாளரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், புலன்விசாரணையை முடித்து, 1-ம் குற்றம் சுமத்தப்பட்ட நபர் மீது இ.த.ச. 1860 பிரிவுகள் 294(பி), 452, 427, 506(i) மற்றும் 4 of TNPWH Act -ன் கீழும், 2 மற்றும் 3 குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் மீது இ.த.ச. 1860 பிரிவுகள் 294(பி), 452, 506(i) -ன் கீழும் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ததாகவும் சாட்சியம் அளித்து மேற்படி ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**9. <u>கு.வி.மு.ச 1973 பிரிவு 313 (1)(b)ன் கீழ் வினவுதல் :-</u>**

அரசுத்தரப்பில் சாட்சியம் அளித்துள்ள சாட்சிகளின் சாட்சியத்தினை தொகுத்து 1 முதல் 3 குற்றம் சுமத்தப்பட்ட நபர்களுக்கு பாதகமாக உள்ள சூழ்நிலைகள் குறித்து 1 முதல் 3 குற்றம் சுமத்தப்பட்ட நபர்களிடம் கு.வி.மு.ச 1973 பிரிவு 313 (1)(b)ன் கீழ் வினவியபோது 1 முதல் 3 குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் பொய் சாட்சி, பொய் வழக்கு என்றும் தங்களது தரப்பில் சாட்சிகள் இல்லை என்றும் பதில் அளித்தார்கள்.

**10. <u>கு.வி.மு.ச 1973 பிரிவு 243-ன் கீழ் குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பு சாட்சிய சான்றாவணங்கள்.</u>**

குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பில் சாட்சிய சான்றாவணம் எதுவும் இல்லை என்று கூறப்பட்டதால் மேற்படி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டு அதனடிப்படையில் குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பில் எவ்வித சாட்சியங்களும், சான்றாவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை.

**11.** இரு தரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் சீராய்ந்து பரிசீலனை செய்யப்பட்டன.

**12.** அரசு தரப்பில் கற்றறிந்த அரசு வழக்கறிஞர் வழக்கை சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணம் செய்திருப்பதாகவும், எனவே குற்றம் சுமத்தப்பட்ட நபர்களுக்கு உரிய தண்டனை வழங்க வேண்டும் என்றும் வாதிட்டார்.

13. குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர், அரசு தரப்பில் நம்பதகுந்த சாட்சிகள் யாரும் விசாரிக்கவில்லை என்றும், அரசு தரப்பில் வழக்கை சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கவில்லை என்றும், விசாரிக்கப்பட்ட அ.சா.1 முதல் அ.சா.5 வரையிலான சாட்சிகள் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கவில்லை என்றும், எனவே சந்தேகத்தின் பலனை குற்றம் சுமத்தப்பட்ட நபர்களுக்கு அளித்து குற்றம் சுமத்தப்பட்ட நபர்களை விடுதலை செய்யவேண்டுமென்று கூறி வாதிட்டார்.

**14. இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், 1-ம் குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு எதிராக இ.த.ச. 1860 பிரிவுகள் 294(பி), 452 (2 counts), 427, 506(ii) மற்றும் 4 of TNPWH Act (2 counts) -ன் கீழும், 2 மற்றும் 3 குற்றம் சுமத்தப்பட்ட நபர்களுக்கு எதிராக இ.த.ச. 1860 பிரிவுகள் 294(பி), 452, 506(ii) -ன் கீழான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பினால் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.**

**15. 1-ம் குற்றம் சுமத்தப்பட்ட நபருக்கு எதிராக இ.த.ச. 1860 பிரிவுகள் 294(பி), 452 (2 counts), 427, 506(ii) மற்றும் 4 of TNPWH Act (2 counts) -ன் கீழும், 2 மற்றும் 3 குற்றம் சுமத்தப்பட்ட நபர்களுக்கு எதிராக இ.த.ச. 1860 பிரிவுகள் 294(பி), 452, 506(ii) -ன் கீழான குற்றச்சாட்டுகள் குறித்த விவாதம்.**

a) கடந்த 31.03.2019-ம் தேதி 11.00 மணிக்கு குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் புகார்தாரரை பார்த்து கெட்டவார்த்தைகள் பேசி, வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்து

வீட்டிலிருந்த செயர்களை எடுத்து வெளியே எறிந்ததாகவும், புகார்தாரர் மற்றும் சாட்சி 2-ன் சேலையை பிடித்து இழுத்ததாகவும், TN10 AR 9469 என்ற பதிவெண் கொண்ட காரின் கண்ணாடியை உடைத்து சுமார் ரூ.25,000/- சேதத்தை ஏற்படுத்தி, எங்களால் தான் உங்களுக்கு சாவு என கொலை மிரட்டல் விடுத்ததாகவும் குறிப்பிட்டு அரசு தரப்பில் முன்வைக்கப்பட்டுள்ள சாட்சியங்களுக்கு குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பில் எவ்விதமான மறுப்புரையும், சாட்சியங்களின் வாயிலாகவோ அல்லது சான்றாவணங்கள் வாயிலாகவோ தெரிவிக்கப்படவில்லை. எனவே கடந்த 31.03.2019-ம் தேதி 11.00 மணிக்கு குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் புகார்தாரரை பார்த்து கெட்டவார்த்தைகள் பேசி, வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்து வீட்டிலிருந்த செயர்களை எடுத்து வெளியே எறிந்ததாகவும், புகார்தாரர் மற்றும் சாட்சி 2-ன் சேலையை பிடித்து இழுத்ததாகவும், TN10 AR 9469 என்ற பதிவெண் கொண்ட காரின் கண்ணாடியை உடைத்து சுமார் ரூ.25,000/- சேதத்தை ஏற்படுத்தி, எங்களால் தான் உங்களுக்கு சாவு என கொலை மிரட்டல் விடுத்ததாகவும் குறிப்பிட்டு அரசு தரப்பில் சொல்லிய சங்கதிகள் உரிய வகையில் சந்தேகத்திற்கு இடமளிக்காமல் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதாகவே இந்நீதிமன்றம் கருதுகிறது.

b) **இருப்பினும் இவ்வழக்கில் சொல்லப்பட்டுள்ள 1 முதல் 3 குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தான் புகார்தாரரை கெட்டவார்த்தை பேசி, அத்துமீறி நுழைந்து, சேலையை பிடித்து இழுத்து, கார் கண்ணாடியை உடைத்து சேதப்படுத்தி, கொலை மிரட்டல்**

**விடுத்து, மரண பயத்தை ஏற்படுத்தினார்களா என்பது குறித்து சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களுடன் ஒன்றிணைத்து சீராய வேண்டியது அவசியமாகும்.**

c) இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரரான அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு அ.சா.1 தனது சாட்சியத்தில், குற்றம் சுமத்தப்பட்ட நபர்களை தனக்கு தெரியும் என்றும், தேதி, மாதம், வருடம் ஞாபகம் இல்லை என்றும், கடந்த 8 வருடங்களுக்கு முன்பு தனது வீட்டின் முன்பு நிறுத்தியிருந்த காரை அடித்து சேதப்படுத்தினார்கள் என்றும், யார் அடித்தார்கள் என்று தெரியவில்லை என்றும் சந்தேகத்தின் அடிப்படையில் புகார் கொடுத்ததாக அரசு தரப்பு வழக்கிற்கு முற்றிலும் முரணான வகையில் சாட்சியம் அளித்துள்ளார்.

d) மேலும் சம்பவத்தை நேரில் பார்த்ததாக சொன்ன கண்ணுற்ற சாட்சியான சசிகலா என்பவர் அ.சா.2 ஆக விசாரிக்கப்பட்டு அவர் தனது சாட்சியத்தில் குற்றம் சுமத்தப்பட்ட நபர்களுடன் பிரச்சனை சம்பந்தமாக ஊர் பெரியவர்கள் முன்னிலையில் சமரசம் பேசி முடித்துக் கொண்டதாகவும், தற்போது எந்த பிரச்சனையும் இல்லை என்றும், சந்தேகத்தின் அடிப்படையில் புகார் கொடுத்ததாக அரசு தரப்பு வழக்கிற்கு முற்றிலும் முரண்பட்ட வகையில் சாட்சியம் அளித்துள்ளார்.

e) மேலும், மற்றொரு கண்ணுற்ற சாட்சியான பிரின்சிலா என்பவர் அ.சா.3 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் தனது சாட்சியத்தில் குற்றம் சுமத்தப்பட்ட நபர்களை தனக்கு தெரியும் என்றும், வழக்கு பற்றி தனக்கு எதுவும் தெரியாது என்றும் என்ன பிரச்சனை

ஏற்பட்டது என்று தெரியாது என்றும் போலீசார் தன்னை விசாரிக்கவில்லை என்று அரசு தரப்பு வழக்கிற்கு முற்றிலும் முரண்பட்ட வகையில் சாட்சியம் அளித்து பிறழ் சாட்சியாக கருதப்பட்டுள்ளார்.

f) மேலும், பார்வை மகஜர் சாட்சிகளான இலுக்கையன் மற்றும் சூரியன் ஆகியோர்கள் அ.சா.4 மற்றும் அ.சா.5 ஆக விசாரிக்கப்பட்டு, அவர்கள் தங்களது சாட்சியங்களில் வழக்கு பற்றி எதுவும் தெரியாது என்றும் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்று அரசு தரப்பு வழக்கிற்கு முற்றிலும் முரண்பட்ட வகையில் சாட்சியம் அளித்து பிறழ் சாட்சியாக கருதப்பட்டுள்ளார்கள்.

g) மேற்படி அ.சா.1 முதல் அ.சா.5 வரையிலான சாட்சியங்களின் சாட்சியத்தை பரிசீலினை செய்தபோது 1 முதல் 3 குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தான் அ.சா.1-ன் வீட்டிற்குள் அத்துமீறி நுழைந்து, கெட்டவார்த்தைகள் பேசியதாகவோ, வீட்டிலிருந்த செயர்களை எடுத்து வெளியே எறிந்ததாகவோ, அ.சா.1-ன் சேலையை பிடித்து இழுத்து பெண்மைக்கு அவமானத்தை ஏற்படுத்தியதாகவோ, அ.சா.1-ன் மகனுக்கு சொந்தமான காரின் கண்ணாடியை அடித்து உடைத்து ரூ.25000/- சேதத்தை ஏற்படுத்தியதாகவோ, கொலைமிரட்டல் விடுத்து மரண பயத்தை ஏற்படுத்தியதாகவோ குறிப்பிட்டு அ.சா.1 முதல் அ.சா.5 வரையிலான சாட்சியங்கள் எந்த சாட்சியமும் அளிக்கவில்லை என்பது இந்நீதிமன்றத்திற்கு தெரியவருகிறது.

h) இவ்வழக்கில் புலன்விசாரணை அதிகாரிக்கு பதிலாக ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியளித்த தலைமை காவலர் ராஜ குமார் என்பவர் அ.சா.6 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் தனது சாட்சியத்தில், புலனாய்வு அதிகாரி வழக்கை, கோப்புக்கு எடுத்துக்கொண்டு முதல் தகவல் அறிக்கையின் பேரில் முறையாக விசாரணை செய்து, சம்பவ இடம் சென்று சாட்சிகள் இலுக்கையன் மற்றும் சூரியன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரிவரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்து, வழக்கு சம்பவ இடத்திலிருந்து இவ்வழக்கின் தடய பொருட்களான உடைந்த பிளாஸ்டிக் சேயர் துண்டுகளை அதே சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சியின் மூலம் கைப்பற்றி படிவம் 91-ன் படி நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டதாகவும், பட்டியல் சாட்சிகள் 1 முதல் 6 வரையானவர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, அதன் பிறகு விசாரணை முடிக்கப்பட்டு குற்றப்பத்திரிக்கை தயார் செய்ததாகவும், ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளித்துள்ளார்.

i) மேற்படி ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளித்துள்ள அ.சா.6 ன் சாட்சியத்தை மட்டும் வைத்து 1 முதல் 3 குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தான் புகார்தாரரின் வீட்டில் அத்துமீறி நுழைந்து, கெட்டவார்த்தைகள் பேசி, செயர்களை எடுத்து வெளியே எறிந்து, அ.சா.1-ன் சேலையை பிடித்து இழுத்து பெண்மைக்கு அவமானத்தை ஏற்படுத்தி, காரின் கண்ணாடியை அடித்து உடைத்து ரூ.25000/- சேதத்தை ஏற்படுத்தி,

கொலைமிரட்டல் விடுத்து மரண பயத்தை ஏற்படுத்தினார்கள் என்று தீர்மானிக்க முடியாது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**16.** மேலும் அ.சா.ஆ.1 புகார் மனுவினை ஒத்துரைக்கும் வகையில் எந்தொரு தனிநபர் சாட்சியும் சாட்சியம் அளிக்கவில்லை. இவ்வாறாக அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களுக்கு இடையே உள்ள முரண்பாடுகளுக்கு எவ்விதமான விளக்கங்களும், காரணங்களும் அரசு தரப்பில் ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் அளிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**17.** மேலே விவரிக்கப்பட்டுள்ளவாறு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களுக்கு இடையே உள்ள முரண்பாடுகள், சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் விதம், குற்றம் சுமத்தப்பட்ட நபர்களை அடையாளம் காட்டப்படாமை, சாட்சிகளின் நம்பகத்தன்மை மற்றும் இவ்வழக்கில் புலன் விசாரணை மேற்கொள்ளப்பட்ட விதம் ஆகியவை குறித்து அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமளிக்காத வகையில் ஏற்கத்தக்க உரிய விளக்கங்கள் மற்றும் காரணங்கள் ஏதும் அளிக்கப்படாததால் அரசு தரப்பானது 1 முதல் 3 குற்றம் சுமத்தப்பட்ட நபர்களுக்கு எதிரான வழக்கினை சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்க தவறிவிட்டதாக இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**18.** மேற்சொன்ன விவரங்களை கருத்தில் கொண்டும் சாட்சிய சான்றாவணங்களை பரிசீலனை செய்ததன் அடிப்படையிலும் 1-ம் குற்றம் சுமத்தப்பட்ட

நபரின் மீதான இ.த.ச. 1860 பிரிவுகள் 294(பி), 452 (2 counts), 427, 506(ii) மற்றும் 4 of TNPWH Act (2 counts) -ன் கீழும், 2 மற்றும் 3 குற்றம் சுமத்தப்பட்ட நபர்களின் மீதான இ.த.ச. 1860 பிரிவுகள் 294(பி), 452, 506(ii) -ன் கீழான குற்றச்சாட்டுகளை அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**19. <u>தீர்வு</u> :-**

முடிவாக, 1-ம் குற்றம் சுமத்தப்பட்ட நபரின் மீதான இ.த.ச. 1860 பிரிவுகள் 294(பி), 452 (2 counts), 427, 506(ii) மற்றும் 4 of TNPWH Act (2 counts) -ன் கீழும், 2 மற்றும் 3 குற்றம் சுமத்தப்பட்ட நபர்களின் மீதான இ.த.ச. 1860 பிரிவுகள் 294(பி), 452, 506(ii) -ன் கீழான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படாததால் சந்தேகத்தின் பலனை இவ்வழக்கின் 1 முதல் 3 குற்றம் சுமத்தப்பட்ட நபர்களுக்கு அளித்து 1 முதல் 3 குற்றம் சுமத்தப்பட்ட நபர்களை இவ்வழக்கின் குற்றவாளிகள் இல்லை என தீர்மானித்து கு.வி.மு.ச. பிரிவு 248(1)-ன் கீழ் 1 முதல் 3 குற்றம் சுமத்தப்பட்ட நபர்களை விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

**20. <u>கு.வி.முச 1973 பிரிவு 452-ன் கீழ் உத்தரவு:-</u>**

இவ்வழக்கில் ஆர்.பி.எண். 43/2019-ல் தாக்கல் செய்யப்பட்டுள்ள உடைந்த பிளாஸ்டிக் சேயர் துண்டுகள் சிறதளவை கு.வி.முச 1973 பிரிவு 452 ன் கீழ் மேல்முறையீட்டு காலத்திற்கு பின் அழிப்பு செய்ய உத்தரவிடப்படுகிறது.

**21. வழக்கில் கு.வி.மு.ச 1973 பிரிவு 437-A- ன் கீழ் உத்தரவு :-**

வழக்கில் கு.வி.மு.ச 1973 பிரிவு 437-A- ன் கீழ் பிணையப்பத்திரம் பெறப்பட்டுள்ளது. மேற்படி பிணையப்பத்திரமானது தீர்ப்புரை தேதியிலிருந்து 6 மாத காலத்திற்கு நடைமுறையில் இருக்கும் என்றும், பின்னர் அப்பிணையப்பத்திரம் காலாவதியாகி விடும் என்று உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று **(15.06.2026)** திறந்த நீதிமன்றத்தில் அவையறியப்பகரப்பட்டது.

ஒம்/- திருமதி. V. பார்கவி, B.A., B.L., LLM.,
நீதித்துறை நடுவர்,
நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்-1,
பத்மனாபபுரம்

**பின் இணைப்பு**

**அரசுத்தரப்பு சாட்சிகள்**

| | | | |
|---|---|---|---|
| அ.சா.1 | செல்வி | 02.06.2026 | அ.சா.ஆ.1 |
| அ.சா.2 | சசிகலா | 02.06.2026 | அ.சா.ஆ.2 |
| அ.சா.3 | பிரின்சிலா | 02.06.2026 | - |
| அ.சா.4 | இலுக்கையன் | 02.06.2026 | அ.சா.ஆ.3 |
| அ.சா.5 | சூரியன் | 02.06.2026 | - |
| அ.சா.6 | ராஜகுமார் | 04.06.2026 | அ.ச.ஆ.4 முதல் அ.சா.ஆ.6 |

**அரசுத்தரப்பில் குறியிடப்பட்ட சான்றாவணங்கள்**

| | | |
|---|---|---|
| அ.சா.ஆ.1/அ.சா.1 | 31.03.2019 | புகார் மனு |
| அ.சா.ஆ.2/அ.சா.2 | 31.03.2019 | புகார்மனுவிலுள்ள அ.சா.2-ன் 2 வது கையொப்பம் |
| அ.சா.ஆ.3/அ.சா.4 | 31.03.2019 | பார்வை மகஜரிலுள்ள அ.சா.4-ன் முதலாவது |

| | | |
|---|---|---|
| | | கையொப்பம் |
| அ.சா.ஆ.4/ அ.சா.6 | 31.03.2019 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.5/அ.சா.6 | 31.03.2019 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.6/அ.சா.6 | 31.03.2019 | பார்வை மகஜர் |

**அரசுத்தரப்பு சான்று பொருட்கள்** : இல்லை

**குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்** : இல்லை

**குறிப்பு** :-

1. வழக்கு விசாரணை காலத்தில் குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் பிணையில் சென்றுள்ளார்கள்.
2. எந்தவொரு அரசு தரப்பு சாட்சியமும் 3 நாட்களுக்கு மேல் விசாரிக்காமல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
3. வழக்கின் முடிவு சம்மந்தப்பட்ட காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒம்/- திருமதி. V. பார்கவி, B.A., B.L., LLM.,
நீதித்துறை நடுவர்,
நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்-1,
பத்மனாபபுரம்

//உண்மை நகல்//

| |
|---|
| Judicial Magistrate Court No.1,<br>Padmanabhapuram.<br><br>Court Seal. |

" The parties shall apply, as soon as possible, for the return of all exhibits which they may wish to preserve, as the record will be liable to be destroyed after three years from this date''.